


புரட்சிப் பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2051 | ஜனவரி 30, 2020 | புரட்சி 19 | முழக்கம் 03 | விலை: ரூ.3.00

## பார்ப்பனர் வாதங்களுக்கு மறுப்பு

# தமிழ் குடமுழுக்குக்கு ஆகமங்கள் தடையா?

***தஞ்சை பெரிய கோயிலின் குடமுழுக்கை தமிழில் நடத்த வேண்டும் என்ற தமிழர்களின் கோரிக்கையை பார்ப்பன புரோகிதர்கள் எதிர்க்கிறார்கள். சமஸ்கிருத மந்திரங்கள் மட்டுமே சக்தி வாய்ந்தவை. தமிழுக்கு அந்த சக்தி இல்லை என்று தொலைக்காட்சி விவாதங்களில் வாதிடுகிறார்கள். காலங்காலமாக சமஸ்கிருதத்தில் தான் 'கும்பாபிஷேகம்' நடக்கிறது என்றும் வாதாடுகிறார்கள். திருவள்ளுவருக்கு காவி உடை போர்த்தி பெரியாரைத் தமிழ் விரோதி என்றும், தாங்களே தமிழ்ப் பற்றாளர்கள் என்றும் நீட்டி முழங்கி வந்த பா.ஜ.க.வினர், தமிழில் குடமுழுக்கு நடத்துவது குறித்து மவுனம் சாதிக்கிறார்கள். தங்களது சமஸ்கிருதப் பார்ப்பனப் பற்றை வெளிக் காட்டாமல் மூடி மறைத்துக் கொள்கிறார்கள். இந்த நிலையில் தமிழ் வழிபாடுகள் தான் நீண்டகால மரபாக இருந்திருக்கிறது என்றும், சிவன், சக்தி, திருமால் வழிபாடுகள் வேதத்திலேயே இல்லாத போது எப்படி சமஸ்கிருத வழிபாடு இருந் திருக்கும் என்றும் தமிழ் ஆய்வாளர்கள் எழுப்பும் கேள்விகளுக்கு பார்ப்பனர்களிடமிருந்து பதில் இல்லை. தமிழ் வழிபாடு குறித்து பல ஆய்வு நூல்களை எழுதிய மறைந்த கு.ச. ஆனந்தன் எழுதிய கட்டுரையை 'புரட்சிப் பெரியார் முழக்கம்' பதிவு செய்கிறது.***

சிவன், திருமால், சக்தி வழிபாடுகள் தமிழகத்தில் சங்க காலத்திற்கு முன்பிருந்தே தமிழ்த் துதி முறைமையுடன் நடைபெற்று வந்தன. அத் தெய்வங்கள் வேதங்களில் இல்லை. தமிழ் வழிபாட்டு நூலான 'மூத்த திருப்பதிகம்' பாடிய காரைக்கால் அம்மையார் தமிழிலேயே வழிபட்டு "முக்தி"யடைந் தார். அவர் அய்ந்தாம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்தவர். 7 முதல் 12ஆம் நூற்றாண்டு வரை தமிழகத் திருக்கோயில்களில் தேவாரத் திருப்பதிகங்களும் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தங்களும் ஓதப்பட்டன என்பதற்குப் பல இலக்கிய, கல்வெட்டுச் சான்றுகள் உள்ளன. பத்து அல்லது பதினோராம் நூற்றாண்டில் ஒன்பது தமிழ்ப் புலவர்களால் 'திருவிசைப்பா' என்ற அரிய தமிழ் வழிபாட்டு நூல் எழுந்தது.

திருமந்திரம், தேவாரங்கள், திருவாசகம், நாலாயிரத் திவ்வியப் பிரபந்தங்கள் முதலியவற்றில் உள்ள தெய்வத் தமிழ்ப் பாடல்களும் மற்ற பக்திப் பனுவல்களில் உள்ள இறைப்பாட்டுக்களும் வெறும் இலக்கியங்களல்ல. தமிழ் வழிபாட்டு முறை நடப்பி லிருந்ததை விளக்கும் 'தமிழ் வாய் மந்திரங்களும் மெய்யுணர்வுக் கருத்துகளும்' ஆகும். அவை வடமொழி ஆகமங்களுக்கு அப்பாற்பட்டு தமிழ்ப் பண்பாட்டின் சிறப்புக் கூறாக மலர்ந்து நெடுங்காலமாக வளர்ந்தவை.

தமிழில் அர்ச்சனை செய்யக் கூடாது என்று வலியுறுத்துபவர்கள் அது ஆகமங்களுக்கு எதிரானது என்று வாதாடுகின்றனர். ஆகமங்கள் என்பவை யாரால் எப்போது எந்நிலையில் எழுதப்பட்டவை என்பதை யாரும் வரலாற்றின் அடிப்படையில் தக்க சான்றுகளோடு கூறுவதில்லை.

ஆகமங்களில் சைவ ஆகமம், வைணவ ஆகமம், சாந்தாகமம் என்பன போன்ற அந்தந்த கடவுளர்க்கு ஏற்ப பல பிரிவுகள் உண்டு. சிவஆகமங்கள் 28. அவற்றில் காமிகாகமம், காரணாகமம், வாதுள ஆகமம், சுப்பிரபோத ஆகமம், புட்கர ஆகமம் ஆகிய ஐந்து மட்டுமே கிரந்த எழுத்தில் அச்சிடப்பட் டுள்ளன.

வைணவ ஆகமங்கள் 108. பாஞ்சராத்திரங்கள், பாகவத சாத்திரம் என இரு வகையாகப் பிரிக்கப்படுகின்றன. பாஞ்சராத்திர முறைப்படி சாதி, குலம், பிரிவு, பால், வருணம் ஆகியவைகளைக் கடந்து வீடுகளிலும் கோயில்களிலும் வழிபாடுகள் நடத்துவதற்கு எல்லா வைணவர்களும் உரிமை பெறுகின்றனர்.

**மகராசன் குழுவின் அறிக்கை**

தமிழக அரசால் அமைக்கப்பட்ட நீதிபதி மகராசன் ஆணைக் குழு தமிழகத் திருக்கோயில்களில் ஆகம விதிகள் மீறப்பட்ட துறைகள் பற்றி விரிவாகப் பேசுகிறது. சோழருக்குப் பின்னர் விசய நகரப் பேரரசு வரை 150 ஆண்டுகள் ஆகம முறைப்படி பல கோயில்கள் நடைபெறவில்லை. சிதம்பரம், திருவரங்கம் கோயில்களில் நீண்டகாலம் பூசைகள் இல்லை. பல கோயில்கள் ஆகம முறைக்கு முரணாகத் தோன்றியுள்ளன. ஆலய அமைப்பு முறைகளும் ஏழாம் நூற்றாண்டிலிருந்து மாறி வந்துள்ளன. எனவே ஆகமங்கள் படிதான் திருக்கோயில்கள் நடைபெறுகின்றன என்பது பொருந்தாது.

**கி.பி. 8ஆம் நூற்றாண்டில் சங்கராச்சாரியால் சிவன், திருமால், முருகன், கணபதி, சூரியன், சக்தி ஆகிய தெய்வங்களுக்குரிய வடமொழி வழிபாட்டு முறைகள் வல்லந்தமாகக் கொண்டு வரப்பட்டன. அதற்கு முன் தமிழிலேயே வழிபாடுகள் நடப்பிலிருந்தது.**

**அர்ச்சனை – பூசனை**

ஒவ்வொரு பக்தரும் தம்முடைய நன்மைக்காக அர்ச்சகர் மூலமாக இறைஞ்சிச் சொல்லுகிற வேண்டுகோள்தான் அர்ச்சனை. அர்ச்சனை என்பது பரார்த்த பூசையின் ஓர் அங்கமல்ல. இது ஆகமங்களில் சொல்லப்படவில்லை. ஆகமங்களில் கூறப்பட்ட 'அர்ச்சனா விதிப்படலம்' பூசை விதி பற்றிக் கூறுகிறது. அதாவது குறித்த தெய்வத்திற்குச் செய்யப்படும் பூசை. இங்கு அருச்சனை என்றால் பூசனை என்று பொருள்.

அஷ்டோத்திரம் (108), திரிகதி (300), சகஸ்ரநாமம் (1008) ஆகிய மூவகை அருச்சனைகளும் புராணத் தன்மை கொண்டனவேயன்றி ஆகம-வேத அடிப்படைகளற்றவை. கணேச சகஸ்கர நாமம் கணேச புராணத்திலும் விஷ்ணு சகஸ்கர நாமம் விஷ்ணு புராணத்திலும் எடுக்கப்பட்டவை. இவை எந்த ஆகமத்திலும் இல்லை. அவற்றில் மந்திரங்கள் இல்லை. அவை வெறும் நாமவளிகளே (பெயர் உச்சரிப்புகள்). **தமிழில் அருச்சனை செய்யக் கூடாது என எந்த ஆகமும் தடைவிதிப்ப தில்லை.**

இந்தியாவிலுள்ள ஜோதி லிங்கங்கள் 12. அத்திருக்கோயில்களில் இராமேசுவரம் தவிர மற்றவற்றில் அனைவராலும் தாமே பூவிட்டுத் தொட்டு தம்மொழியில் போற்றி வணங்கி வழிபாடு நடைபெறுகின்றன. அருச்சகர்கள் துணையாக மட்டும் இருப்பர். கி.பி. 1644 வரை பழனித் திருக்கோயிலில் தமிழ் வழிபாடும் பண்டாரப் பூசனையும் நடைபெற்று வந்தன. திவான் இராமப்ப அய்யரால் அங்கு வடமொழி வழிபாடும் ஆகம முறையும் திணிக்கப்பட்டன.

**நந்தன் இதழில் : நவ.16–30, 1998இல் வெளி வந்த கட்டுரை**

**– புரட்சிப் பெரியார் முழக்கம் 30.01.2020**

## ரஜினிகாந்த் வீடு முற்றுகை: கழகத் தோழர்கள் கைது




பெரியாரை இழிவாகப் பேசிய நடிகர் ரஜினிகாந்த் மன்னிப்பு கேட்க வலியுறுத்தி, தென் சென்னை மாவட்ட செயலாளர் இரா.உமாபதி தலைமையில் 22.01.2020 அன்று காலை 11 மணியளவில் ரஜினிகாந்த் வீடு முற்றுகைப் போராட்டம் நடைபெற்றது.

ரஜினிகாந்த் மன்னிப்பு கேட்க வலியுறுத்தி கண்டன முழக்கங்கள் எழுப்பப்பட்டன. மேலும் ரஜினிகாந்தின் உருவ பொம்மையும் கொளுத்தப்பட்டது. நூற்றுக்கு மேற்பட்ட தோழர்கள் கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

செய்தியாளர் சந்திப்பின்போது உமாபதி, 'இனியும் ரஜினிகாந்த் மன்னிப்பு கேட்கா விட்டால் தொடர்ந்து ரஜினிகாந்த் படங்கள் திரையிடப்படும் திரையரங்கங்கள் முற்றுகையிடப்படும்' என தெரிவித்தார். சுமார் ஒரு மணி நேரம் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

அதன் பின் தோழர்கள் கைது செய்யப்பட்டு மண்டபத்தில் அடைக்கப்பட்டனர். மாலை 6 மணியளவில் தோழர்கள் விடுதலை செய்யப்பட்டனர். ஆர்ப்பாட்டத்திற்கு சேலம், புதுச்சேரி மற்றும் சென்னை கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

தலையங்கம்

## பார்ப்பனர் எச்சில் இலையில் உருளுவது மதச் சுதந்திரமா?

சித்தராமய்யா கருநாடக முதல்வராக இருந்தபோது மூட நம்பிக்கைகளைத் தடை செய்யும் சட்டம் ஒன்றைக் கொண்டு வந்தார். ‘பேய் ஓட்டுதல்’ ‘பில்லி சூன்யம்’ என்ற பெயரில் ஏமாற்றுதல், தண்டனைக்குரிய குற்றம் என்று அந்தச் சட்டம் கூறியது. ஆனால் பா.ஜ.க. சட்டமன்ற உறுப்பினர்கள் இந்தச் சட்டத்தைக் கடுமையாக எதிர்த்தனர். இந்து மதத்துக்கு எதிரானது என்று கூச்சல் போட்டார்கள். இப்போது இரு நாட்களுக்கு முன் கருநாடகாவில் எடியூரப்பா தலைமையில் நடக்கும் பா.ஜ.க. ஆட்சி அந்தச் சட்டத்துக்கு ஒப்புதல் வழங்கி அரசிதழிலும் வெளியிட்டிருக்கிறது. எதிர்கட்சியாக இருந்தபோது மூடநம்பிக்கை ஒழிப்பு இந்து விரோதமாக இருந்தது. இப்போது ஆளும் கட்சியான பிறகு இந்து ஆதரவாகி விட்டதுபோலும். எப்படி இருந்தாலும் பா.ஜ.க.வின் ஒப்புதலை நாம் வரவேற்கிறோம்.

இதே கருநாடக மாநிலத்தில் உள்ள குக்கி சுப்ரமணியசாமி கோயிலில் ‘மடேஸ் நானா’ என்ற ஒரு சடங்கு 500 ஆண்டுகளாக பின்பற்றப்பட்டு வந்தது. பார்ப்பனர்கள் சாப்பிட்டுவிட்டு வீசி எறிந்த எச்சில் இலைகளில் மிச்சம் மீதியிருப்பதை, தலித் மற்றும் பழங்குடி மக்கள் சாப்பிட்டுவிட்டு, அந்த எச்சில் இலை மீது படுத்து உருள வேண்டும்; அப்படி ‘அங்கப் பிரதட்சனம்’ செய்தால் தோல் நோய் நீங்கும் என்ற நம்பிக்கையை பார்ப்பனர்கள் உருவாக்கியிருந்தனர். இதை உண்மை என்று நம்பி பார்ப்பன எச்சில் இலை மீது ஒடுக்கப்பட்ட மக்கள் விழுந்து புரண்டு வந்தார்கள். பார்ப்பனர்களின் மனித விரோத வர்ணத் திமிர் இப்படி ஒடுக்கப்பட்ட மக்களின் சுயமரியாதையையும் கவுரவத்தையும் காவு கேட்டது. 2012ஆம் ஆண்டு இந்த சடங்கை தடை செய்யக் கோரி மனித உரிமையாளர்கள் கருநாடக உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர். இரண்டு நீதிபதிகளைக் கொண்ட அமர்வு சடங்குக்கு தடை விதித்தாலும், சில நிபந்தனைகளுடன் சடங்கை அனுமதித்தது. கடவுளுக்குப் படைக்கப்பட்ட ‘பிரசாதம்’ கொண்ட இலையை, பக்தர்கள் தங்கள் விருப்பப்படி தேர்வு செய்து, அதன் மீது ‘அங்கப் பிரதட்சனம்’ செய்யலாம் என்பதே நீதிமன்றத்தின் உத்தரவு. இதை எதிர்த்து பார்ப்பனர்கள் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தார்கள். இப்போது மற்றொரு இரண்டு நீதிபதிகள் அடங்கிய அமர்வு, ஏற்கனவே விதித்த நிபந்தனைகளை நீக்கி, ‘மடேஸ் நானாவின்’ மூல வடிவத்தை மாற்றக் கூடாது; அப்படியே பிராமணர் சாப்பிட்ட எச்சில் இலையில் உருளுவதுதான் சடங்கின் நோக்கம். இது மதச் சுதந்திரம் என்று தீர்ப்பளித்தது. இறுதித் தீர்ப்பு வரும் வரை இச்சடங்கை நிறுத்தி வைப்பது பக்தர்களின் நம்பிக்கையைப் புண்படுத்துவதாகும் என்றும் கூறி விட்டது.

தீர்ப்பை எதிர்த்து மனித உரிமை செயற்பாட்டாளர்கள் உச்சநீதிமன்றம் சென்றார்கள். 2014இல் உச்சநீதிமன்றம் இந்த சடங்குக்கு தற்காலிகத் தடை விதித்து உத்தரவிட்டது. ‘மதச் சுதந்திரம்’ என்ற போர்வையை பார்ப்பன – வேதமதம் தனது மேலாண்மைக்கும் பார்ப்பனரல்லாத மக்களை ஒதுக்கி வைத்து இழிவுபடுத்துவதற்குமே ஒரு கவசமாகப் பயன்படுத்தி வருகிறது.

இது குறித்து ‘இந்து’ ஆங்கில நாளேட்டில் வெளி வந்த ஒரு கட்டுரை (கவுதம் பாட்டியா – சுஹ்ரித் பார்த்தசாரதி எழுதியது) ஆழமாக விவாதிக் கிறது. மதச் சார்பற்ற நீதிமன்றம், மதம் தொடர்பான நடைமுறைகளை விசாரிக்கும்போது அதன் பார்வை ஒன்றுபோல் இருப்பதில்லை என்று அக்கட்டுரை சுட்டிக் காட்டுகிறது.

அரசியல் சட்டத்தின் 25 முதல் 28 வரையிலான கூறுகள் மதச் சுதந்திரத்தை உறுதி செய்தாலும், “பொது ஒழுங்கமைதி, ஒழுக்க நெறி, நல்வாழ்வு ஆகியவற்றுக்கு பங்கம் ஏற்படுத்தாமல் மதப் பிரச்சினைகளை நிர்வகிக்க வேண்டும் என்று பிரிவு 26 உரிமை வழங்குகிறது. பிரிவு 28, அரசு கல்வி நிறுவனங்களில் மத அடிப்படையிலான கட்டளைகளைச் செயல்படுத்த அனுமதி மறுக்கிறது.

மதத்தின் சடங்குகளை பின்பற்ற வேண்டும் என்று கட்டாயப் படுத்தும் வழிபாட்டு முறைகள், சமூகத்தை இழிவு செய்வதாக இல்லாமல் மனித மாண்புகளை மதிப்பதாக இருக்க வேண்டும். ஒரு சமூகம் காலப் போக்கில் அதன் வளர்ச்சிக்கேற்ப பழமைகளைக் கைவிட முன்வருவதே சமூகம் முதிர்ச்சிப் பெறுகிறது என்பதற்கான அடையாளம். அந்தக் கண்ணோட்டத்தில் தான் இந்து மதம் அங்கீகரித்த ‘தீண்டாமை’ சட்டப்படி குற்றமாக்கப்பட்டுள்ளது. ஜாதியை வாழ்க்கை முறையாக நிலைநிறுத்திவிட்ட இந்து மதம், ஜாதியை மீறுவோரை சமூகத் தலைவர்கள் விலக்கி வைக்கவும் ஜாதியிலிருந்து ஒதுக்கி வைக்கவுமான சமூக அதிகாரங் களை அதன் தலைவர்களுக்கு வழங்குவதை எப்படி ஏற்க முடியும்?.

அனைத்து ஜாதியினரும் முறையாகப் பயிற்சி பெற்று அர்ச்சகராகலாம் என்ற சட்டத்தை உச்சநீதிமன்றம் காலம் காலமாக பின்பற்றப்பட்டு வரும் ‘ஆகம நடைமுறை’ என்ற பார்வையில் பார்த்ததே தவிர, பார்ப்பனரல்லாத சமூகம் விலக்கி வைக்கப்படுகிறது; இது மனித மாண்புகளுக்கு எதிரானது என்ற கண்ணோட்டத்தில் பார்க்கவில்லை. இதை ஒரு‘தீண்டாமைக் குற்றமாக பார்க்கத் தயாராக இல்லை. இதே உச்சநீதிமன்றம் சில ஆண்டுகளுக்கு முன்பு பம்பாய் ஹாஜி அலி தர்காவில் பெண்களை அனுமதிக்காதது குறித்த வழக்கில் மத நடைமுறையைப் பார்க்காமல், பெண்கள் விலக்கி வைக்கப்படுகிறார்கள் என்ற பார்வையில் பெண்கள் நுழைய அனுமதித்து தீர்ப்பளித்தது. ஆனால், சபரிமலை அய்யப்பன் கோயிலில் பெண்களை அனுமதிப்பது குறித்த வழக்கில் பெண்களை அனுமதிக்கலாம் என்று நீதிபதி டி.ஒய். சந்திரசூட்டும், அனுமதிப்பது மத சம்பிரதாயத்துக்கு எதிரானது என்று இந்து மல்ஹோத்ராவும் தீர்ப்பு வழங்கினர். இரண்டு தீர்ப்புகளுமே சபரிமலை கோயில் நடைமுறைகளைப் பற்றி மட்டுமே இருந்ததே தவிர, பெண்களை விலக்கி வைப்பது சரியா, தவறா என்ற கண்ணோட்டத்தில் பார்க்கவில்லை. ‘மதச் சுதந்திரம்’ குறித்த சட்டப் பிரிவுகளில் நீதிபதிகள் விருப்பு வெறுப்புக்கு ஏற்ப தீர்ப்புகள் வழங்கப்படுவதே வழமையாகி விட்டது.

பார்ப்பனர்கள் தங்களுக்கான அதிகாரத்தை எவரும் மறுத்துவிட முடியாது என்ற ஆதிக்கப் பார்வையே பெரும்பாலான தீர்வுகளில் மேலோங்கி நிற்கிறது. அதற்கு சட்டங்கள் துணையாக நிறுவப்படுவதும் வழக்கமாகிவிட்டது. மதச் சுதந்திரம் குறித்து விளக்கம் அளிக்க வேண்டிய பொறுப்பு இப்போது 9 நீதிபதிகள் அமர்வு முன் விசாரணைக்கு வந்துள்ள நிலையில், நீதிமன்றம் என்ன கூறப் போகிறது என்பதை பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.

# அமேசான் காடுகளுக்கு தீ வைத்த பிரேசில் அதிபர் இந்தியாவின் குடியரசு தின சிறப்பு விருந்தினராம்

இந்தியாவின் 71ஆவது குடியரசுத்தின விழாவிற்கு, சிறப்பு அழைப்பாளராக, ஒரு தீவிர வலதுசாரியும், கடைந்தெடுத்த பிற்போக்காளருமான பிரேசில் ஜனாதிபதி ஜெய்ர் போல்சானரோவை அழைத்து வந்தது மோடி அரசு. பிரிக்ஸ் கூட்டமைப்பு நாடுகளின் 11ஆவது உச்சி மாநாடு பிரேசில் தலைநகர் பிரேசிலியாவில் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் நடைபெற்றது. 2 நாள் நடைபெற்ற மாநாட்டுக்கு இடையே பிரேசில் ஜனாதிபதி ஜெய்ர் போல்சானரோவை பிரதமர் நரேந்திர மோடி சந்தித்துப்பேசினார்.

அப்போது விடுக்கப்பட்ட அழைப்பை ஏற்றுத்தான், 71ஆவது ஆண்டுக்கான இந்திய குடியரசு தின சிறப்பு விருந்தினராக ஜெய்ர் போல்சானரோ தில்லிக்கு வந்துள்ளார். பிரதமர் மோடி போகிற போக்கில், இந்த அழைப்பை விடுத்ததாக பார்க்க முடியாது. ஆர்எஸ்எஸ். பாஜகவின் சனாதன சித்தாந்தங்களுக்கு மிகவும் நெருக்கமானவர் போல்சானரோ. ஆர்எஸ்எஸ். - பாஜகவைப் போல, பெண்கள், சிறுபான்மையினர், பழங்குடி மக்கள், விளிம்புநிலையினர், அகதிகள் என - இவர்கள் யாரையுமே பிரேசில் ஜனாதிபதி போல்சானரோவுக்கு ஆகாது. “உன்னை பாலியல் வன்கொடுமை செய்யமாட்டேன். நீ அதற்கு தகுதியானவள் கிடையாது”- என்று நிச்சயமாக ஒரு நாட்டின் தலைவர் பேசமாட்டார். ஆனால்பிரேசில் ஜனாதிபதி போல்சானரோ, பேசிய பேச்சுதான் இது. 2003ஆம் ஆண்டின் போது, நாடாளுமன்ற பெண் உறுப்பினர் ஒருவரைப் பார்த்து இவ்வாறு பேசிய போல்சானரோ, கேமிராக்களின் முன்னிலையிலேயே அந்த பெண் உறுப்பினரின் மார்பில் கை வைத்து தள்ளியும் விட்டார். பிரான்ஸ் ஜனாதிபதி மனைவியைக் கிண்டலடித்ததுடன், பெண் பத்திரிகையாளர் ஒருவரையும் தரக்குறைவாக விமர்சித்தார்.

தேர்தல் பிரச்சாரத்தின்போது, “போலீஸ் விசாரணையில் சித்ரவதைசெய்யும் முறையை சட்டப்பூர்வமாக்குவோம்” என்று போல்சனாரோ வாக்குறுதி அளித்ததும், “என் மகன் தன்பாலின ஈர்ப்பாளர் என்று தெரிந்தால், அவன் மீது எனக்கு பாசம் இருக்காது. அவன் வாழ்வதற்கு பதிலாக சாகலாம்” என்றதும் பிரேசிலில் பிரபலமான நிகழ்வுகளாகும். கடந்த காலத்தில் சர்வாதிகார ஆட்சியில் பிரேசிலின் எந்த பிரச்சனையும் தீர்க்கப்படவில்லையே என்று செய்தியாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு “போதுமான அளவுக்கு இராணுவம் மக்களைக் கொல்லாததே அதற்கு காரணம். இன் னும் ஒரு முப்பதாயிரம் மக்களைக் கொன்றிருக்க வேண்டும்” என்று போல்சானரோ பேசியபோது உலகமே அதிர்ச்சி அடைந்தது.

அப்படிப்பட்ட ஒருவரைத்தான், பழங்குடி மக்களுக்கு எதிராக, அமேசான் காடுகளுக்கு தீ வைத்த ஒரு குரூரமான பேர்வழியைத்தான்- இந்திய குடியரசு தின சிறப்பு அழைப்பாளராக மோடி அரசு அழைத்து வந்துள்ளது. ஒரு வலதுசாரி பிற்போக்காளரை மனிதகுல விரோதியை மேடையில் ஏற்றி, இந்திய குடியரசுத் தின விழாவை சிறுமைப்படும் நிலைக்கு தள்ளியுள்ளது. போல்சானரோவின் அனைத்து குரூரங்களும், பிற்போக்குத்தனங்களும் மத்திய பாஜக அரசுக்கு அவர் மீது ஈர்ப்பை ஏற்படுத்தக் கூடியவைதான். எனினும், குடியுரிமைத் திருத்தச் சட்டம்கொண்டுவந்து, சொந்த மக்களையே அகதிகளாக்கி வதை முகாமில் அடைக்க முயற்சி மேற்கொண்டிருக்கும் மோடி அரசுக்கு, அகதிகளை ‘பூமியின் கழிவுகள்’ என்று போல்சனாரோ அழைத்தது, ஒரு உடனடி ஈர்ப்பை அளித்திருக்கலாம் என்று விமர்சனங்கள் எழுந்துள்ளன.

சுற்றுச் சூழல் அமைப்புகள் பிரேசில் அதிபரை விருந்தினராக அனுமதித்ததற்கு கடும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளன.

# சிலை உடைப்பைக் கண்டித்து பெரியார் இயக்கங்கள் ஆர்ப்பாட்டம்



செங்கல்பட்டு மாவட்டம் களியப்பேட்டை கிராமத்தில் உள்ள பெரியார் சிலை 23.01.2020 அன்று இரவு மர்ம நபர்களால் மர்மமான முறையில் உடைக்கப்பட்டது. பெரியாரின் சிலை உடைப்பைக் கண்டித்து செங்கல்பட்டு பேருந்து நிலையம் எதிரில், செங்கல்பட்டு மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் ஒருங்கிணைப்பில், திராவிடர் கழகம், திராவிடர் விடுதலைக் கழகம், தந்தை பெரியார் திராவிடர் கழகம் ஆகிய அமைப்புகளின் சார்பில், மர்ம நபர்களை கைது செய்யக்கோரி மாலை 4 மணியளவில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தில், தலைமைக் குழு உறுப்பினர் அய்யனார், செங்கல்பட்டு மாவட்ட கழகத் தோழர்கள் மற்றும் திராவிடர் கழகம், தந்தை பெரியார் திராவிடர் கழகத் தோழர்கள் பங்கேற்றனர்.

# உள்ளாட்சியில் வெற்றி பெற்ற முதல் திருநங்கை: கழகத் தோழர்கள் நேரில் வாழ்த்து



தமிழகத்தில் முதன் முதலாக தேர்தலில் நின்று, தமிழகத்தின் முதல் திருநங்கை ஒன்றியக் (கருவேப்பம்பட்டி) கவுன்சிலராக திமுக சார்பில் வெற்றி பெற்ற ரியா அவர்களை அவரது இல்லத்தில், திராவிடர் விடுதலைக் கழகம் திருச் செங்கோடு நகரம் சார்பாக, நகரச் செயலாளர் பூபதி, சோம சுந்தரம், விஜய்குமார், பிரகாஷ், மனோஜ் ஆகியோர் சந்தித்து வாழ்த்துகள் தெரிவித்ததுடன், கழகத்தின் வெளியீடுகளான இவர்தான் பெரியார், கருஞ்சட்டைக் கலைஞர் புத்தகங்கள் மற்றும் நிமிர்வோம் மாத இதழ்களை வழங்கி வாழ்த்துகள் தெரிவித்தனர்.

# விடுதலை இராசேந்திரன் விளக்க உரை (3)

# இஸ்லாமியர்களுக்கு குடியுரிமை தரக் கூடாது என்பதே ஆர்.எஸ்.எஸ். கொள்கை

*குடியுரிமைத் திருத்தச் சட்டம் – குடியுரிமை பதிவேடு – தேசிய மக்கள் தொகைப் பதிவேடு களில் பா.ஜ.க. ஆட்சி அவசரம் காட்டுவது ஏன்? என்பதை விளக்கி ஜனவரி 4, 2020 அன்று, சென்னை தலைமைக் கழகத்தில் நடந்த ‘நிமிர்வோம்’ வாசகர் வட்டத்தில் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் உரை யாற்றினார். அவரது உரையிலிருந்து:* (சென்ற இதழ் தொடர்ச்சி)

உத்திர பிரதேசத்தின் முதல்வர் தனது டிவிட்டர் பக்கத்தில், ‘திருத்தச் சட்டத்திற்கு எதிராக போராடு கிறவர்கள் எங்களின் ஒடுக்கு முறையைக் கண்டு அஞ்சி ஓட வேண்டும்’ என்று பதிவிடும் அளவிற்கு அங்கு நிலைமை மோசமாக சென்று கொண்டிருக்கிறது. மோடி சொல்கிறார், குடியுரிமைப் பதிவேடு பற்றி நாங்கள் விவாதிக்கவே இல்லை என்று. எதிர்ப்பு வந்த பின்பு இந்தக் கருத்தை கூறுகிறார். ஒரு நாட்டினுடைய பிரதமராக இருக்கக்கூடிய ஒருவர் இதைவிட ஒரு தரம் தாழ்ந்தவராக இருக்க முடியாது. ஏனென்றால், அசாமில் இருந்து கொண்டு அமித்ஷா கூறுகிறார் இந்தியா முழுவதும் இந்த சட்டத்தை நாங்கள் அமல்படுத்தப் போகிறோம் என்று. அதன்பிறகு கவுஹாத்தியில் அவரது கட்சியின் கூட்டணிக் கட்சி மாநாட்டில் பேசுகின்றபோது அனைத்து மாநிலங்களிலும் இந்த பதிவேட்டை கொண்டு வரப் போகிறோம் என்று அமித்ஷா அங்கேயும் கூறினார். நாடாளுமன்றத்தில் இதன் விவாதம் வந்தபோது மத்திய அமைச்சர்களாக இருக்கிறவர்கள் இந்த குடியுரிமைப் பதிவேடு சட்டம் அனைத்து மாநிலங்களிலும் கொண்டு வர வேண்டும் என்று கூறினார்கள். 2019ஆம் ஆண்டு உள்துறை அமைச்சகம் வெளியிட்ட ஒரு அறிக்கையில் குடியுரிமைப் பதிவேடு அனைத்து மாநிலங்களிலும் அமுலாக்கப்படும் என்று திட்டவட்டமாக கூறியது. நாடாளுமன்றக் கூட்டுத் தொடரில் குடியரசுத் தலைவர் உரையாற்றுகின்றபோது இந்த அரசு இப்படி ஒரு பதிவேட்டை உருவாக்க இருக்கிறது என்று அறிவித்தார். எல்லாவற்றிற்கும் மேலாக பாரதிய ஜனதா கட்சியின் தேர்தல் அறிக்கையிலேயே (பக்கம் 11 வரிசை எண் 7) நாங்கள் ஆட்சிக்கு வந்தால் குடியுரிமைப் பதிவேட்டைப் படிப்படியாக நாட்டின் பிற பகுதிக்கும் கொண்டு வருவோம் என்று கூறியிருக்கிறது. இப்படி ஆதாரங்கள் இருக்கின்ற நிலையில், நாங்கள் இதைப்பற்றி விவாதிக்கவே இல்லை என்று ஒரு பிரதமரே அப்பட்டமான பொய்யை கூறுவது இந்த நாடு எப்படி தரம் தாழ்ந்து போய்க் கொண்டிருக்கிறது என்பதற்கு உதாரணம்.

உண்மையில் அசாமிலேயே 6 தடுப்புக் காவல் முகாம்கள் இருக்கின்றன. 6 தடுப்புக் காவல் முகாம்களில், குழந்தை ஒரு இடம், அப்பா ஒரு இடம் என்று தனித்தனியாகப் பிரித்து அடைக்கப்பட் டிருக்கிறார்கள். இதை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் வழக்கு வந்த பிறகு உச்சநீதிமன்றம், தடுப்பு காவல் முகாம்களை முறைப்படுத்துங்கள் என்று மத்திய அரசே தாக்கீது அனுப்பியது. இவர்களுடைய உள்துறை அமைச்சகமே உத்தரவை பிறப்பித்திருக் கிறது. அசாம் மட்டுமல்ல கர்நாடகாவில், டெல்லியில் தடுப்புக் காவல் முகாம்கள் உள்ளன. இந்தியாவின் பல இடங்களில் எப்படி தடுப்புக் காவல் முகாம்களை அமைப்பது என்று உள்துறை அமைச்சகமும் தாக்கீதுகளை அறிவித்துக் கொண்டு இருக்கிறது. இவ்வளவுக்கும் பிறகும் இந்தியாவில் எந்த தடுப்புக் காவல் முகாம்களும் இல்லை என்று இந்திய நாட்டினுடைய பிரதமர் பேசுகிறார் என்று சொன்னால் இதைவிட ஒரு மோசமான, அப்பட்டமான பொய் வேறு ஏதாவது இருக்குமா?

“குடியுரிமைத் திருத்தச் சட்டத்தை ஆதரித்த கட்சிகள் தேசிய குடியுரிமைப் பதிவேடு தயாரிக்க முடியாது என்று மறுத்து விட்டன. பா.ஜ.க. ஆதரவு அணியிலுள்ள ஆட்சிகளும் இதில் அடங்கும். உடனே அமைச்சரவை கூடி, ‘குடியுரிமைப் பதிவேடு’ தயாரிக்கும் திட்டம் இப்போது இல்லை; ‘தேசிய மக்கள் தொகை பதிவேடு’ (என்.பி.ஆர்) தயாரிக்கப் போவதாக அறிவித்து, அதற்கு ரூ.4000 கோடி நிதி ஒதுக்கீடும் செய்தார்கள். ஏதோ மக்கள் தொகைக் கணக்கு எடுப்பதுபோல மக்கள் இதையும் கருதி ஏமாந்து விடுவார்கள் என்று நினைத்தார்கள். தமிழக முதல்வர் எடப்பாடி பழனிச்சாமியும் இத்திட்டத்தை உடனே செயல்படுத்தப் போவதாக அறிவித்து விட்டார். மக்கள் தொகைக் கணக்கெடுப்புக்கும் மக்கள் தொகைப் பதிவேட்டுக்கும் வேறுபாடு உண்டு.

மத்திய அமைச்சர் ரவி சங்கர் பிரசாத் மக்களுக்கான நலத் திட்டங்களை செயல்படுத்த



கொள்கை வகுக்க வேண்டும் என்பதற்காக என்.பி.ஆர். தகவல்கள் தனக்கு வேண்டும் என்று தெரிவிக்கின்றார். அப்படியானால் நலத் திட்டங்கள் தனித்தனி நபர் களுக்காக தனித்தனி கொள் கையாக வகுக்கப்படுகின்றதா? என்று கேள்வி எழுப்ப வேண்டி இருக்கின்றது.

1948ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட மக்கள் தொகைக் கணக்கெடுப்பு சட்டத்தின்படி மக்களிடம் கேட்கப்படும் புள்ளி விவரங்களில் தனிநபர் கருத்துகள் எந்த நிலையிலும் வெளியே போகாது. அந்த புள்ளி விவரம் மட்டுமே வெளிப் பார்வைக்கு செல்லும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்திய மக்களின் ஆதார் விவரங்களை கையாள்வதற்காக 2016ஆம் ஆண்டு யூடிஏஐ என்ற ஒரு அமைப்பு உருவாக்கப்பட்டது. அந்த அமைப்பின் மேலும் 98 சதவீத மக்கள் ஆதார் பெற்று விட்டார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அரசுக்கு தேவையான அத்தனை விவரங்களும் ஆதாரில் இடம் பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மக்களின் நல்வாழ்வு திட்டங்களை மக்களிடம் கொண்டு சேர்ப்பதற்கு ஆதார் பயன்பட்டு வருகின்றது. தற்போது மத்திய அரசு கேட்கின்ற இரண்டு விவரங்களும் ஏற்கனவே கிடைத்துக் கொண் டிருக்கின்றது. ஒன்று கொள்கையை உருவாக்குவதற்கு சென்சஸ் பயன்படுகின்றது. மற்றொன்று நலத் திட்டங்களைக் கொண்டு சேர்ப்பதற்கு ஆதார் பயன்படுகின்றது. அதன் பிறகு எதற்காக என்.பி.ஆர். கேட்கப்படுகின்றது என்பதே கேள்வி?

பத்து வருடத்திற்கு ஒரு முறை எடுக்கப்படும் மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் தனிப்பட்ட விவரங்கள் அங்கேயே தங்கி விடும். அதனுடைய தகவல்கள் மட்டுமே வெளியே சென்றடையும். அடுத்த 10 வருடத்திற்கு கணக்கெடுப்பு எடுப்பதற்கு முன் அந்தத் தகவல்கள் அழிக்கப்பட்டுவிடும். அத்தனை தகவல்களையும் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு வழங்கிவிடும். ஆக இது எதிலுமே என்.பி.ஆர். என்ற ஒன்று கிடையவே கிடையாது.

அப்படியானால் என்.பி.ஆர். எங்கிருந்து வருகின்றது என்றால் குடியுரிமைத் திருத்தச் சட்டம் என்று சொல்லக் கூடிய சட்டத்தின் துவக்கமாக வருகிறது. சென்சஸ் சட்டத்தின் நோக்கம் வேறு, குடியுரிமைச் சட்டத்தின் நோக்கம் வேறு. குடியுரிமைத் திருத்தச் சட்டத்தின் அத்திவாரம் தான் என்.பி.ஆர். ஆகும்.

என்.பி.ஆர். கணக்கெடுப்பிற்கு எந்த விதமான ஆவணங்களும் காட்டத் தேவையில்லை என்று சொல்கின்றார்கள். நல்வாழ்வுத் திட்டம் எனக்காகக் கொடுக்கும்போது எதற்காக என் அப்பாவின் பிறப்பிடம் பற்றி கேட்கின்றீர்கள்? என்ற கேள்வி எழுகின்றது. என்.பி.ஆர். கணக்கெடுப்பில் ‘ரிமார்க்’ என்ற பகுதி எதற்காக அமைக்கப்பட்டுள்ளது? என்ற கேள்வியும் எழுகின்றது. ஆக தேசிய குடியுரிமை பதிவேட்டுக்கான (என்.ஆர்.சி.) ஆவணம் தான் தேசிய மக்கள் தொகை பதிவேடு (என்.பி.ஆர்.).

தேசிய மக்கள் தொகை பதிவேட்டின் நோக்கம் ஒவ்வொரு குடிமகனுக்கும் குடிமகன் எண் கொடுப்பதாகும். அதற்குப் பிறகு என்.ஆர்.சி. குடியுரிமை வழங்கப்படும். என்.பி.ஆர். பதிவேட்டில் உள்ள ‘ரிமார்க்’ என்ற இடத்தில் சந்தேகத்துக்குரிய நபர் என்று எழுதப்பட்டால் அதிகாரிகள் விசாரணைக்கு வருவார்கள். என்.பி.ஆர். கணக் கெடுப்பில் 130 கோடி மக்களுக்கும் பிரச்சினை வந்துவிடாது என்பது உண்மை தான்.

அதில் வெறும் மூன்று கோடி மக்களுக்கு பிரச்சினை வருகிறது என்று வைத்துக் கொண்டால் அந்த மூன்று கோடி பேரில் என்னுடைய உறவினர் இருப்பார். அவரை அகதிகள் முகாமிற்கு அழைத்துச் செல்லப்படும்போது என்னுடைய மனநிலை எப்படி இருக்கும்? நான் அவர்களிடத்தில் கேள்வி எழுப்பினால், நீ இந்திய குடிமகன், இவர் இந்திய குடிமகன் இல்லை என்று பதில் சொல்வார்கள்.

மிகப் பெரிய பதட்டத்தை உருவாக்குகிறார்கள். 130 கோடி பேரில் மூன்று கோடி பேர் குடிமக்கள் தானா என்ற கேள்வியே கொந்தளிப்பை உண்டாக்காதா? இந்தியாவின் எல்லையோர மாநிலங்களில் இதை அமல்படுத்தினால் ஒரு நியாயம் இருக்கிறது. ஆனால் சுதந்திரம் அடைந்து 70 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியா முழுவதும் இதை அமல்படுத்துவதற்கு என்ன அவசியம் வந்தது?

2010இல் இந்த கணக்கெடுப்பு மேற் கொள்ளப் பட்டபோது ஏன் அமைதியாக இருந்தார்கள்? என்று கேட்கின்றார்கள். இன்றைக்கு இருப்பதுபோன்ற ஒரு குறிப்பிட்ட மதத்தினருக்கு மட்டும்தான் குடியுரிமை என்ற வாதம் அன்றைக்குக் கூறப்படவில்லை. அதன் காரணமாக அன்றைக்கு சந்தேகம் எழவில்லை.

தமிழக முதல்வர் குடியுரிமைப் பதிவேட்டை ஏற்றுக் கொள்ளவில்லை என்று சொல்கின்றார். அப்படியானால் அதற்கு அச்சாரமாக விளங்கும் மக்கள் தொகை பதிவேட்டையும் தமிழக அரசு ஏற்றுக் கொள்ளக் கூடாது. மக்கள் தொகை பதிவேட்டை அனுமதித்தால் அவர்கள் குடிமக்கள் எண்ணை உருவாக்கிக் கொள்வார்கள். ஆக, 2020இல் எடுக்க வேண்டியது மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மட்டும்தானே தவிர, என்.பி.ஆர். அல்ல!

குடியுரிமை என்பதற்கு ஏன் அவர்கள் இவ்வளவு முக்கியத்துவம் தருகிறார்கள்? இந்தியா என்பது இந்துக்களுக்கான ஒரு நாடு என்கிறார்கள். பார்ப்பனர்களும் சங்பரிவாரங்களும் இந்தியா என்ற சொல்லை பயன்படுத்துவதில்லை. இது இந்துக்களின் தேசம்! இந்துக்களின் நாட்டில் வாழுகிற இஸ்லாமியர், கிருத்துவர் போன்ற பிற மதத்தினர் (foreigners) இந்து கலாச்சாரத்தை ஏற்றுக் கொண்டு, இந்துக்களுக்கு அடிபணிந்து வாழ்ந்தால் மட்டுமே அவர்கள் இங்கே வாழலாம் அப்படி வாழ முடியாதவர்களுக்கு இங்கே குடியுரிமையே வழங்க முடியாது என்பதே இவர்களின் கொள்கை. ஆதாரத்துடன் கூறுகிறோம். எப்படி கிருத்துவர் களுக்கு பைபிள் இருக்கிறதோ, இஸ்லாமியர்களுக்கு குர்ஆன் இருக்கிறதோ அதே போல ஆர்.எஸ்.எஸ். இன் சித்தாந்தத்தை உருவாக்கியவர் கோல்வாக்கர். அந்த கோல்வாக்கரின் சித்தாந்தங்கள் தான் இன்று ஒவ்வொன்றாக செயல்படுத்தப்படுகிறது. அந்த கோல்வாக்கர் ‘நாம், நமது தேசத்தின் வரையறை’ என்ற நூலை எழுதியிருக்கிறார்.

அதில் இவ்வாறு கூறுகிறார்: “இந்துஸ்தானில் வாழக்கூடிய அனைவரும் இந்துக்கள். அவர்களுக்கான இனத்தின் அடையாளம் இந்தியர் அல்ல; இந்து என்பது தான். இந்து மதத்தைச் சாராத பிற மதத்தினர் அனைவரும் அன்னியர்கள். அவர்கள் இந்துஸ்தான் என்ற பாரத தேசத்தில் வாழ வேண்டுமானால் இந்து கலாச்சாரத்தை மதிக்க வேண்டும்; அதற்கு அடிபணிய வேண்டும். இந்துக்கள் அல்லாத பிற மத அன்னியர்கள் தங்களுக்கான தனித்த அடை யாளங்களை இழந்துவிட வேண்டும். இந்துக்கள் பெருமையை மட்டுமே பேச வேண்டும். இதை ஏற்க மறுக்கும் இந்துக்கள் அல்லாத வர்களுக்கு ‘குடியுரிமை’ கூட வழங்கக் கூடாது” என்று கோல்வாக்கர் - ‘நாம் அல்லது நமக்கான தேசத்தின் வரையறை’ (We or our nationhood defined) என்ற நூலில் இப்படிப் பதிவு செய்திருக்கிறார்.

“The foreign races of Hindustan must either adopt the Hindu Culture and language; must learn to respect and hold in reverance Hindu Religion” என்று எழுதியதோடு அவர்கள் தங்களுக்கான தனி அடையாள உரிமைகளை இழந்தே தீரவேண்டும் (They must lose their seperate existance) என்று அந்த நூலில் எழுதி யிருக்கிறார். அவர்கள் தங்களுக்கான உரிமை களையோ, முன்னுரிமையோ கோர முடியாது என்பதோடு குடியுரிமை கோரவும் உரிமை இல்லை. (They may stay in the country, wholly subordinated to the Hindu Nation, claiming nothing, deserving no privileges; far less any preferential treatment - **not even citizen’s rights**) (மேற்குறிப்பிட்ட நூலின் பக்கம் 47-48)

இஸ்லாமியர்களுக்கு குடியுரிமை கூட வழங்கக் கூடாது என்ற ஆர்.எஸ்.எஸ். பிதாமகர் கோல்வாக்கர் கருத்துக்கு தரப்பட்டுள்ள சட்ட வடிவம்தான் குடியுரிமை திருத்தச் சட்டம்.

ஆர்.எஸ்.எஸ்-இன் இந்து இராஷ்ட்ரம் என்ன சொல்கிறது? ஆர்.எஸ்.எஸ். இன் ஆரம்பகால சித்தாந்தம் ‘அகண்ட பாரதம்’ என்பதாகும். அந்த அகண்ட இந்து இராஷ்டிரத்தில், ‘பாகிஸ்தான், பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான், பர்மா, சீனா’ சீனாவையும் அவர்கள் விட்டுவைக்கவில்லை. சீனாவையும் அடக்கியது தான் அவர்களின் அகண்ட இந்து இராஷ்டிரம். இதை கோல்வாக்கர் Bunch of thoughts என்ற நூலில் குறிப்பிட்டிருக்கிறார். அது தமிழில் ’சிந்தனைக் கொத்து’ என்று வெளி வந்திருக்கிறது.

- தொடரும்

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/19-21 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2019-2021
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# திருப்பூர்–கொளத்தூர்–மேட்டூரில் தமிழர் திருநாள்

திருப்பூர் மாவட்ட திவிக சார்பில் பதினோராம் ஆண்டு தை 1 தமிழ்ப் புத்தாண்டு பொங்கல் விழா நாள் 26.1.2020 ஞாயிறு காலை 8 மணிக்கு மாஸ்கோ நகர் பெரியார் திடலில் நிகர் கலைக்குழுவினர் பறை முழக்கத் துடன் ஆரம்பித்தது.




தமிழர் விழா, பகுதி மக்களின் ஒத்துழைப்போடு நடைபெறும் இவ்விழாவில் முதல் நிகழ்வாக காலை 9 மணி அளவில் தோழர் புல்லட் இரவி (அமமுக) பொங்கல் வழங்கினார். அதனை தொடர்ந்து சிறுவர் சிறுமி களுக்கான பல்வேறு விளையாட்டுப் போட்டிகளை சேகர் (அதிமுக) தொடங்கி வைத்தார். கழகப் பொருளாளர் துரைசாமி தொடக்க உரையாற்றிய பின் திருப்பூர் மாவட்டத் தலைவர் முகில்ராசு, செயலாளர் நீதிராசன், அமைப்பாளர் அகிலன், சங்கீதா, மாநகர் தலைவர் தனபால், செயலாளர் மாதவன் மற்றும் மாநகர் அமைப்பாளர் முத்து ஆகியோர் பல்வேறு விளையாட்டு போட்டிகளை திறம்பட நடத்தினர். உடன் தமிழ்நாடு மாணவர் கழக நிர்வாகிகள் தோழர் சந்தோஷ் மற்றும் பிரசாந்த் ஒருங்கிணைத்தனர்

சிறுவர் சிறுமிகளுக்கு மட்டு மல்லாமல் பெரியவர்களுக்கான விளையாட்டு போட்டிகளும் நடந்தது. பொதுமக்கள் மற்றும் அரசியல் கட்சிகளை சார்ந்தவர்கள் பெரும் திரளாக கலந்து கொண்டு தமிழர் திருவிழாவை இணைந்து பங்கேற்று வெற்றிக் கொண்டாட் டங்களில் மகிழ்ந்தனர். மதிய உணவாக அனைவருக்கும் பிரியாணி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. உணவு இடைவேளைக்கு பின் 3 மணிக்கு துவங்கிய பெரியவர்களுக்கான போட்டி மாலை 6 மணி வரை நடந்தது.

மேடை நிகழ்ச்சி மாலை 6 மணிக்கு மாஸ்கோ நகர் பகுதி குழந்தைகளின் நடனங்களுடன் தொடங்கியது. பகுத்தறிவு பாடல்களுக்கு உற்சாகமாக நடனமாடி மகிழ்வித்தனர். சோழன் பன்முக கலையகம் சார்பில் பள்ளி மாணவர்களின் சிலம்பம் மற்றும் பல்வேறு தற்காப்பு கலைகளை நிகழ்த் தினர். கழகத் தலைவர் கொளத்தூர் மணி அனைவருக்கும் புத்தகம் மற்றும் நினைவு பரிசை வழங்கினார்

தொடர்ச்சியாக புதுகை பூபாளம் கலைக் குழுவினர் நையாண்டி தர்பார் சமகால அரசியல் நிகழ்வுகளை பகுத்தறிவு பார்வையில் மக்களுக்கு எளிதில் சென்று சேரும் வண்ணம் நடத்தினர். இடையிடையே பாடல்களோடு தமிழகம் மத்திய மாநில அரசுகளால் வஞ்சிக்கப்படுவதையும், திருவள்ளுவர் விழா அனைத்து தரப்பு மக்களும் சேர்ந்து கொண்டாடும் முக்கியத்துவத்தைப் பாடல்களாக பாடினர். கடவுள் பேரால் அடிமைப்படுத்தி சிந்திக்க கூடாதென்று வைத்துள்ள வரலாற்றினை எடுத்துக்கூறி மக்களை பகுத்தறிவு கொண்டு சிந்தித்து ஏன், எதற்கு, எப்படி என்ற கேள்விகளை கேட்க வேண்டிய நோக்கத்தை நையாண்டியோடு எடுத்து சொன்னார்கள் குழுவினர். மாஸ்கோ நகர் பெரியார் திடலில் அனைத்து தரப்பு மக்களும் மகிழ்ச்சியோடு கைதட்டி உற்சாகப் படுத்தினார்கள்.

கலை நிகழ்ச்சிகள் முடிந்து தொடங்கிய மேடை நிகழ்வை மாநகர் செயலாளர் மாதவன் தலைமை தாங்கினார். சரண்யா வரவேற்புரை நிகழ்த்தினார். தோழர்கள் சந்திரா, கோமதி, மகாலட்சுமி, முத்துலட்சுமி, தேன்மொழி, மாரியம்மாள் மற்றும் சரசு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பாண்டியநாதன் தொடக்க உரையோடு, மாவட்டத் தலைவர் முகில்ராசு மற்றும் கழகப் பொருளாளர் துரைசாமி திருவள்ளுவர் விழாவின் நோக்கத்தினை எடுத்துரைத்தார்கள்.

கழக அமைப்புச் செயலாளர் ஈரோடு இரத்தினசாமி, மாநில தலைமைக் குழு உறுப்பினர்கள் காவை ஈஸ்வரன், மடத்துக்குளம் மோகன், சூலூர் பன்னீர்செல்வம், பரிமளராசன் மற்றும் மாவட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினார். தைப் புத்தாண்டின் வரலாற்றையும், திருவள்ளுவரை தன்வயப்படுத்தி கவர நினைக்கும் மதவாத சக்திகளின் சதிகளையும் விளக்கினார். திருக்குறள் மாநாடு நடத்தி தந்தை பெரியார் எவ்வாறு திருவள்ளுவரை மக்கள் மத்தியில் கொண்டு சென்றார் என்பதை விளக்கியதோடு திராவிடர் விடுதலைக் கழகம் தமிழ்நாடெங்கும் பிறப் பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற முழக்கத்தோடு நடத்திவரும் பொங்கல் விழாவினை திருப்பூரில் அனைத்து அரசியல்கட்சி தோழமைகளோடு மக்கள் விழாவாக நடத்தியதை மகிழ்வோடு பாராட்டினார்.

விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு வழங்கியதோடு, புதுகை பூபாளம் குழுவினர்களுக்கும் நினைவு பரிசை கழகத் தலைவர் மற்றும் பல்வேறு அரசியல் கட்சிகளை சேர்ந்தவர்களும் கழக தோழர்களும் வழங்கினர்.

நிகழ்வின் இறுதியாக திருப்பூர் மாவட்டக் கழகம் சார்பில் கழகத் தலைவருக்கு நினைவுப் பரிசினை தோழர்கள் வழங்கினர். தோழர்கள் அனைவருக்கும் இரவு உணவு ஏற்பாடு செய்யப்பட்டு வழங்கப்பட்டது.

நிகழ்ச்சிக்கு ஈரோடு, சேலம், கோவை மற்றும் மடத்துக்குளம் பகுதியில் இருந்து தோழர்கள் வந்து நிகழ்வை சிறப்பித்தனர்.

**செய்தி : விஜயகுமார்**

**கொளத்தூரில் :** திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் 23.1.2020 அன்று கொளத்தூர் பெரியார் பேருந்து நிலையத்தில் திருவள்ளுவர் விழா பொதுக்



கூட்டம் சிறப்பாக நடைபெற்றது. இக்கூட்டத் தில் கு. சூரியகுமார் சேலம் மேற்கு மாவட்ட தலைவர் வரவேற்புரையாற்றினார். கொளத்தூர் நகர செயலாளர் சி. ராமமூர்த்தி தலைமையில் கூட்டம் துவங்கியது. முன்னதாக மேட்டூர் டி.கே.ஆர். இசைக் குழுவினரின் பறை இசை மற்றும் பகுத்தறிவு பாடல்கள் இசை நிகழ்ச்சி நடைபெற்றது.

தொடர்ந்து தலைமைக் குழு உறுப்பினர் அ.சக்திவேல் மற்றும் கழகத் தோழர் சரவண பரத் ஆகியோர் உரைக்குப் பின், நாஞ்சில் சம்பத், கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆகியோர் சிறப்புரையாற்றினர். இறுதியாக காவை இளவரசன் நன்றி கூறினார். இக்கூட்டத்தில் காவலாண் டியூர், மேட்டூர், மேட்டூர் ஆர்.எஸ், லக்கம்பட்டி, உக்கம் பருத்திக்காடு, குருவரெட்டியூர், குமாரபாளையம் ஆகிய பகுதிகளில் இருந்து கழகத் தோழர்களும் பொதுமக்களும் பெரும் திரளாகக் கலந்து கொண்டனர்.

**மேட்டூரில் :** மேட்டூர் நகர திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பாக தமிழ்ப் புத்தாண்டு பொங்கல் விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. படிப்பகம் மின்



விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டது. படிப்பக நுழைவாயில் முன்பு அலங்கார வளைவுகளும் பதாகைகளும் வைக்கப்பட்டது. படிப்பகத்தின் அருகில் நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டியினை கழகத் தலைவர் கொளத்தூர் மணி தொடங்கி வைத்தார். பின்பு படிப்பகத்தில் பொங்கல் கரும்பினை வழங்கினார். நிகழ்ச்சியில் மேட்டூர் டி.கே.ஆர் இசைக் குழுவினரின் பறை முழக்கம் நடைபெற்றது. இந்நிகழ்வில் பொது மக்களும் தோழர்களும் திரளாக கலந்து கொண்டனர். நிகழ்ச்சியினை மேட்டூர் நகர திராவிடர் விடுதலைக் கழகம் சிறப்பாக ஏற்பாடு செய்தது.

## கழகத் தோழர்களே!

புரட்சிப் பெரியார்முழக்கம், நிமிர்வோம் இதழுக்கு சந்தா சேர்க்கும் இயக்கத்தை விரைந்து தொடங்கிடுவீர்!

2020ஆம் ஆண்டில் இதழ்கள் தொடர்ந்து வெளிவர வேண்டிய பொறுப்பை தோழர்கள் உணர்வார்கள் என்று நம்புகிறோம்.

இயக்க இதழ்கள் தான் தோழர்களை இணைக்கும் இணைப்புச் சங்கிலி. தோழர்களின் செயல்பாடுகளை சுமந்து வரும் கழகத்தின் ‘தூது மடல்’.

ஒரு இயக்கம் உயிரோட்டமாக தன்னை இறுத்திக் கொள்வதற்கு இயக்க இதழ்களே சுவாசக் காற்று என்பது, நீங்கள் அறியாதது அல்ல!

தோழர்களே! விரைந்து செயல்படுங்கள்! பிப்ரவரி இறுதிக்குள் சந்தா சேர்ப்பு இயக்கத்தை நிறைவு செய்தாக வேண்டிய கடமை உணர்ந்து, களத்தில் இறங்குங்கள்!

55 வருட பட்டின் பாரம்பரிய ஸ்தாபனம்...
**சிந்தாமணி சில்க்ஸ்**
கைத்தறி திருமண பட்டு சேலை தயாரிப்பாளர் & மொத்த விற்பனையாளர்
ஹோல்சேல் கடை
சிந்தாமணியூர், ஓமலூர் வழி, சேலம்.(DT).
04290 248304/ 90952 48304
chinthamanisilks | www.chinthamanisilks.com

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
ஆண்டுக்கட்டணம்
ரூ.200
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.
✆ 7373684049

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 30th January 2020

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN